**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.422/2021 |
| Deposition of witness for Prosecution | : | P.W-7 |
| Name | : | கனகசுந்தரம், வயது 50 |
| Father Name/Husband Name | : | தபசு |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | சிறப்பு உதவி ஆய்வளார் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of March 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோப்பம்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 11.06.2021 ஆம் தேதி 19.00 மணிக்கு கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது, கோவில்பட்டி பங்களா தெருவைச் சேர்ந்த பாலமுருகன் மனைவி கற்பகவள்ளி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.783/2021 பிரிவுகள் 406, 417, 420 IPC ஆக வழக்கு பதிவு செய்தேன்.
2. என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தது தான். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். வழக்கு பற்றி விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. அ.சா.1 கொடுத்த புகார்மனுவில் என்ன மாடல் செயினை எதிரியிடம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல 2 பவுன் பட்டை செயினை கொடுத்தாக சொல்லியுள்ளார். அந்த இரண்டு பவுன் தங்க செயின் அ.சா.1ற்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் கொடுத்தாரா என்றால் இல்லை.

2. புகார் கொடுக்க வரும் போது சான்று பொருளான டிபன் பாக்சை கொண்டு வந்ததாரா என்றால் ஆம். மேற்படி விவரம் அ.சா.ஆ.10 ஆவணத்தில் துலங்காது என்றால் சரியல்ல. சான்று பொருளை புகார் கொடுக்க வரும் போது கொண்டு வந்ததாக சொல்வது, பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.
3. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 நிலையம் ஆஜராகி புகார்மனு கொடுத்ததாக சொல்வதும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. உங்கள் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.